மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம். அரசு 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் 1—4—1970 முதற்கொண்டு 22—3—1973 வரை நியமிக்கப்பட்டவர்களுக்கு 21—3—1974 முதற்கொண்டு பணி வரன்முறை செய்யப்படுகிறது.

(இ) அரசு (ஆணை) நிலை எண். 428 கல்வி, நாள் 21—3—1974 மற்றும் அரசாணை (நிலை) எண். 765, கல்வி, நாள் 16—5—1974-ல் உள்ள ஆணைக்கேற்ப செய்யப்படுகிறது. அரசாணை (நிலை) எண். 765, கல்வி, நாள் 16—5—1974-ல் 1—4—1970-க்குப்பின் 'பி' பிரிவு பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்டு 21—3—1974-ல் ஒரு வருடத்திற்குக் குறையாமல், பணிக்காலம் நிரம்பப்பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் மற்றும் தனித் தேர்வு பெற்ற ஆசிரியர்கள் அனைவரின் பணியையும் 21—3—74 முதல் வரன் முறைப்படுத்த ஆணையிடப்பட்டது.

திரு. பி. ஆர். தாமஸ் : 21—3—1974-ல்தான் வரன்முறைப்படுத்த வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 1—4—1970 லிருந்து 3—3—73 வரையில் நியமனம் செய்யப்பட்டு 3—8—73-ல் வரன்முறை செய்யப்பட்டவர்களுக்கு முந்திய கால ஊதியமும் நிலுவையும் வழங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டார்கள். அதே மாதிரி இந்தப் பகுதியினருக்கும் சலுகை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்து யோசனையை கவனத்தில் எடுத்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்த ஆணையின்படி பட்டதாரி ஆசிரியர்களும் தமிழாசிரியர்களும் ஒரே நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதே நிலையில் உள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கொடுத்திருக்கும்போது தமிழாசிரியர்களுக்கு ஏன் கொடுக்கப்படவில்லை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்து நான் பரிசீலிக்கிறேன்.

Salaries of Teachers of Pasumpon Muthuramalinga Thevar College.

* 189 *Q.*—THIRU D. SANTOSHAM and THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the teachers of the Pasumpon Muthuramalinga Thevar College, Usilampatti, Madurai district, have not been paid their salaries for the last four months;

(b) whether the Government have paid the Teaching Grant to the Management for the said period;

(c) if so, the reason for the non-payment of the salaries; and

(d) the action taken thereon?

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரி ஆசிரியர்களுக்கு சம்பளம்.

திரு. டி. சந்தோஷம் & திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்--

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரியின் ஆசிரியர்களுக்கு கடந்த நான்கு மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) மேற்சொன்ன கால அளவில் நிர்வாகத்திற்கு கல்வி மானியத்தை அரசு வழங்கியுள்ளதா?

(உ) ஆம் எனில், சம்பளம் வழங்கப்படாததற்கான காரணம் என்ன?

(எ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) & (எ) 1975-76 மற்றும் 1976-77 ஆண்டுகளுக்கான நிதி கணக்குகளை நிர்வாகம், கல்லூரி கல்வி இயக்குனருக்கு இன்னமும் அனுப்பாத தால், இக்கல்லூரிக்குச் சேரவேண்டிய மானியத்தைக் கணக்கிட்டு வழங்க இயலவில்லை. விரைவிலேயே கணக்குகளை நிர்வாகம் அனுப்புவதாகக் கூறியுள்ளது. அவைகளைப் பெற்றபின் அரசு மானியத்தை கல்லூரிக் கல்வி இயக்குநர் வழங்குவார். இதைக் கொண்டு ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க இயலும்.

திரு. பி. ஆர். தாமஸ்: மேற்படி கல்லூரியிலே ஆசிரியர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட க்ஷேமநல நிதி கூட அந்தக் கணக்கில் காட்டப்படவில்லை. அதேபோன்று உத்தமபாளையம், உசிலம்பட்டி கல்லூரிகளிலும் ஆசிரியர்களின் நிலை இருப்பதால், அவர்களுக்கு நேரிடையாகவே அரசு ஊதியத்தை வழங்க முன்வருமா? உத்தமபாளையத்தில் ஆறு மாதங்களாக ஊதியம் தரப்படாமல் ஆசிரியர்கள் அவல நிலையில் இருப்பதால், அவர்களுக்கும் உசிலம்பட்டி ஆசிரி யர்களுக்கும் நேரிடையாக ஊதியம் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பொதுவாக ஆசிரியர்களுக்கு முறையாக ஊதியத்தை வழங்கிவிட்டு, அதற்குப் பின்னர் அதற்கான மானியத்தைப் பெற்றுக்கொள்வது அந்தந்த நிர்வாகத்தினரின் வேலையாகும். இந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில், அந்தக் கணக்குகளைக் கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பாமலிருப்பது முக்கியமான காரணமாக இருக்கிறது. கூடிய வரையில் அந்தந்த ஆண்டிலேயே மானியம் வழங்கலாம் என்று அரசு கொள்கை அளவில் முடிவு செய்திருக்கிறது. அப்படி வழங்கும் போது, நிர்வாகம் அவற்றைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் இருக்காது. உசிலம்பட்டி கல்லூரியைப் பொறுத்தவரையில், விசாரணை நடைபெற்று கல்லூரிக் கல்வி இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார். விரைவில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தேவர் கல்லூரியிலே எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள் ? ஒரு மாதத்திற்கு எவ்வளவு சம்பளம் பட்டுவாடா செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துத் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஆர். சக்தி மோகன் : கல்லூரி ஆசிரியர்கள் பல காரணங்களைக் குறிப்பிட்டு உண்ணாவிரதம் போன்ற இயக்கங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதில் பல்கலைக் கழகம் நேரடியாகத் தலையிட்டு, ஆவன செய்ய வேண்டுமென்று நிர்வாகத்தின் தரப்பில் வேண்டுகோள் விடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : விசாரணை நடத்தப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கைமீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அரசின் தீர்மானங்கள்

(1) தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை மேற்கொள்ளுதல்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது"